புதுடெல்லியில் நேற்று முன்தினம் (13.06.2023) பேரிடர் மேலாண்மை குறித்து மாநில பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்கள் ஆய்வு கூட்டம் ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த், ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றம் - வனத்துறை சார்பில்

சென்னை காலநிலை செயல்திட்ட கையேடு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, ஜூன் 15-

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் சென்னை காலநிலை செயல் திட்ட கையேட்டை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.6.2023) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் சென்னைக்கான முதல் காலநிலை செயல் திட்ட கையேட்டினை வெளியிட்டார். இத்திட்டம், 2050 ஆம் ஆண்டிற்குள் சென்னை மாநகரம் கார்பன் சமன்பாட்டை எட்டுவதற்கும், தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்பு நோக்கமான 2070 ஆண்டிற்குள் கார்பன் உமிழ்வை பூஜ்ஜியமாக குறைக்கும் இலக்கை எட்டுவதற்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

பருவநிலை மாற்ற தொடர்பான பன்னாட்டு அரசுகளின் குழு (ஐபிசிசி) கடல் மட்ட உயர்வு, கடுமையான அதிக வெப்பநிலை மற்றும் சென்னை போன்ற கடலோர நகரங்களுக்கு காலநிலை பாதிப்புகளால் ஏற்படும் அபாயங்கள் ஆகியவற்றால் கடுமையான சேதங்கள் வரவிருப்பதை எச்சரிக்கிறது. கடற்கரை நகரமான சென்னை போன்ற நகரத்திற்கான காலநிலை செயல்திட்டமானது, உள்ளூர் அளவில் செயல்படுத்தப்படும் அறிவியல் அடிப்படை கொண்ட நடவடிக்கைகளை பிரதிபலிக்கும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழலை பாதுகாக்க தீவிர நடவடிக்கை!

சென்னை காலநிலை செயல் திட்டமானது, சென்னையை காலநிலை மீள் தன்மை கொண்ட செயலூக்கம் உள்ள நகரமாக மாற்றுவற்கான முக்கியமான முதல் படியாகும். தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழலைப் பாதுகாக்க தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் மாசினை குறைத்து, காலநிலை சவால்களை எதிர்கொள்ளவும், மக்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்தவும் பசுமை வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் உதவியாக இருக்கும்.

காலநிலை மாற்ற நிகழ்வுகளை காணும்போது, மனித செயல்பாட்டிற்கும், காலநிலை மாற்றத்திற்கும் உள்ள தொடர்பு முன்னிலை படுத்தப்படுகிறது. தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம், தமிழ்நாடு ஈர நிலங்கள் இயக்கம், தமிழ்நாடு பசுமை இயக்கம் ஆகியவற்றால், நமது மாநிலம் காலநிலை மாற்றத்தை நோக்கிய நீண்ட பயணத்திற்கு தன்னை தயார்படுத்திக் கொண்டிருக்கிறது.

வெள்ளம் - கடல் மட்ட உயர்வு!

சென்னை காலநிலை செயல் திட்டமானது, தமிழ்நாடு மாநில காலநிலை மாற்றம் குறித்த செயல் திட்டத்துடன் ஒன்றி காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பேரிடர்களான புயல், வெள்ளம் மற்றும் கடல் மட்ட உயர்வு போன்றவற்றில் சிறப்பு கவனம் செலுத்தி காலநிலை மாற்றத்தை எதிர் கொள்ள உதவியாக இருக்கும்.

அரசின் ஈடுபாடும் மற்றும் தலைமை பண்பும் ஒரு லட்சியமிக்க காலநிலை செயல் திட்டத்தை உருவாக்கிட முடியும் என்பதற்கு சென்னை முன்னுதாரனமாக விளங்குகிறது. இது குறிப்பாக உலகின் தெற்கு பகுதியில் அதிக காலநிலை அபாயம் உள்ள நகரங்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

சென்னை காலநிலை செயல் திட்டமானது, C40 நகரங்கள் ஆதரவுடன், அகமதாபாத்தில் உள்ள நகர்ப்புற மேலாண்மை மையத்துடன் இணைந்து உருவாக்கப்பட்டது. இச்செயல்திட்டமானது கார்பன் உமிழ்வை குறைக்கும் நோக்கமான 201819 உமிழ்வு அளவுகளுடன் ஒப்பிடுகையில், 2030 ஆம் ஆண்டில் 1% அதிகரிப்பு, 2040 இல் 40% குறைதல் மற்றும் 2050 ஆம் ஆண்டில் நிகர பூஜ்ஜியத்தை அடைவற்கான, பாரிஸ் காலநிலை ஒப்பந்தங்களுடன் ஒத்துப்போகிறது. இத்திட்டம் ஆறு முன்னுரிமை பகுதிகளில் நடவடிக்கை மேற்கொள்ள கவனம் செலுத்துகிறது.

மின் தொகுப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் (Electrical grid and renewable energy): சென்னை அதன் காலநிலை செயல்திட்டத்தின் மூலம் 2050 ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தில் இருந்து 93% மின்சாரத்தை அடைய இலக்கு நிர்ணயித்துள்ளது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆற்றல்!

வணிக கட்டடங்களில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆற்றலை கட்டமைத்தல் (Building energy): 2050 ஆம் ஆண்டுக்குள் சென்னையின் 100% வணிகக் கட்டடங்களில் அதிக திறன் கொண்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆற்றலை பயன்படுத்துவதை இலக்காகக் கொண்டு செயல்படும்.

நிலையான போக்குவரத்து (Sustainable transport): சென்னையில் 2050-ஆம் ஆண்டுக்குள், நிலையான போக்குவரத்து இயக்கத்தை ஊக்குவிப்பதற்கு 80% நகர உட்போக்குவரத்தை பொதுபோக்குவரத்து மூலம் அடையவும், நடைபயிற்சி மற்றும் சைக்கிள் ஓட்டுதலை ஊக்குவிக்கவும், மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளை 100% மின்மயமாக்குதல் மற்றும் தனியார் வாகனங்களின் மின்மயமாக்கலை ஊக்குவிக்கும் இலக்குகளுடன் செயல்படும்.

திடக்கழிவு மேலாண்மை (Solid waste management): சென்னை நகரின் திடக்கழிவுகளை 100% மேலாண்மை செய்கக் கூடிய திறமையான, பயனுள்ள மற்றும் மீள்திறன் கொண்ட கழிவு மேலாண்மை அமைப்பு உருவாக்கப்படும்.

நகர்ப்புற வெள்ளம் மற்றும் தண்ணீர் பற்றாக்குறை (Urban flooding and water scarcity): சென்னையை "தண்ணீர்செயல் திறன்" மிக்க நகரமாக மாறுவதற்கான திட்டத்தின் ஒரு பகுதியாக, 2050 ஆம் ஆண்டுக்குள் நகரத்தின் 35% பகுதியில் நகர்ப்புற இயற்கையை விரிவுபடுத்தும் நோக்கம் செயல்படுத்தப்படும்.

அனைவருக்கும் அழிவில்லாத கால நிலை!

பாதிப்புக்குள்ளாகக்கூடிய பிரிவினர் மற்றும் சுகாதாரம் (Vulnerable populations and health): சென்னையில் வெள்ள அபாய மண்டலங்களுக்குள் வசிக்கும் பாதிக்கப்படக்கூடிய மக்களின் மறுவாழ்வு, வெப்பத்தைத் தாங்கும் திறன் மற்றும் பரவலாக்கப்பட்ட சுகாதார உள்கட்டமைப்பிற்காக தற்போதுள்ள குடிசை வீடுகளை மறுசீரமைத்தல் ஆகியவற்றால் "அனைவருக்கும் அழிவில்லாத காலநிலை" ஆதாரத்தை நோக்கி சென்னை நகரம் செயல்படும்.

இந்நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, தெற்கு மற்றும் மேற்கு ஆசிய பகுதி C40 மண்டல இயக்குநர் ஸ்ருதி நாராயண், C40 நகர ஆலோசகர் பெஞ்சமின் மேத்யூஸ் ஜான், நகர மேலாண்மை மையம் அகமதாபாத் இயக்குநர் மன்விதா பராடி, துணை இயக்குநர் மேகனா மல்கோத்ரா, சென்னை காலநிலை செயல் திட்ட குழுத்தலைவர் டாக்டர் பி.ஜெயபால், நகர மேலாண்மை மையம் - அகமாபாத் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சுவேதா தில்வாதியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மதுரை மாவட்டம் ஆவின் வளாகத்தில் ஆய்வு மேற்கொண்டு

154 பயனாளிகளுக்கு ரூ. 55,37,780 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்!

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் வழங்கினார்!

மதுரை, ஜூன் 15 -

மதுரையில் செயல்பட்டு வரும் ஆவின் ஐஸ்கிரீம் தொழிற்சாலை மற்றும் பால் உற்பத்தி மையம் ஆகியவற்றின் செயல்பாடு குறித்து நேற்று முன்தினம் (13.06.2023) பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு, ஆவின் வளாகத்தில் பால் உற்பத்தியாளர்கள் உடன் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் 154 பயனாளிகளுக்கு ரூ. 55,37,780/ மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தொடர்ந்து, பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாட்டில் ஆவின் நிறுவனம் பொதுமக்களுக்கு மிகவும் பயனளிக்க கூடியசிறந்த பொதுத்துறை நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. ஆவின் நிறுவனத்தின் மூலம் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், பால் உற்பத்தியாளர்களுக்கு உரிய விலை கிடைப்பதற்கும், பால் பொருட்கள் தரமாகவும் குறைந்த விலையிலும் பொதுமக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றோம். தமிழகத்தில் தற்போது ஆவின் மூலம் நாளொன்றிற்கு 40 இலட்சம் முதல் 45 இலட்சம் லிட்டர் வரையில் பால் கையாளப்படுகிறது. இதனை 70 இலட்சம் லிட்டர் வரையில் உயர்த்துவதற்கு இலக்காகக் கொண்டு செயல்பட்டு வருகிறோம். அதன்படி, தமிழ் நாட்டில் ஆவின் நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் உற்பத்தி மையங்களின் செயல்பாடு மற்றும் உட்கட்டமைப்பு குறித்து நேரடியாக ஆய்வு செய்து வருகிறோம்.

அந்த வகையில், இன்றைய தினம் மதுரை மாவட்டத்தில் உள்ள ஆவின் நிறுவனத்தை ஆய்வு செய்யப்பட்டுள்ளது. தேசிய அளவிலும், தமிழ் நாடு மாநில அளவிலும் தற்போது பால் உற்பத்தி குறைந்து வருகிறது. இதனைக் கருத்திற்கொண்டு பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக, பால் உற்பத்தியாளர்களை ஊக்குவித்திடும் வகையில் கறவை மாடுகள் வாங்குவதற்கும், பராமரிப்பதற்கும் கடனுதவி வழங்குதல், கறவை மாடுகளுக்கு காப்பீடு, பசுந்தீவனப் புல் வளர்ப்புக்கான விதை வழங்குதல், அதிகளவில் பால் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களுக்கு பரிசு வழங்கி ஊக்குவித்தல் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆவின் நிறுவனம் பால் உற்பத்தி மட்டுமல்லாது பாலில் இருந்து கிடைக்கப் பெறும் பொருட்களான தயிர், மோர், நெய், பால் கோவா, ஐஸ்கிரீம் போன்றவற்றையும் பொதுமக்களுக்கு வழங்கி வருகிறது. நடப்பாண்டில் இந்த பால் பொருட்களின் உற்பத்தி 10 சதவிகிதம் அதிகரித்துள்ளது. நுகர்வோர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் இப்பொருட்களின் தேவையும் நுகர்வோர்களிடையே அதிகரித்துள்ளது. சில இடங்களில் பால் பொருட்கள் தாமதமாக நுகர்வோர் களுக்கு சென்று சேருவதாக செய்திகள் உள்ளன. ஆவின் நிறுவனத்தில் தேவைக்கேற்ப மனித ஆற்றலை அதிகரித்து உரிய நேரத்தில் நுகர்வோர்களுக்கு பால் பொருட்கள் கிடைப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

தமிழகத்தில் அமுல் நிறுவனம் பால் உற்பத்தி விவகாரம் தொடர்பாக தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள், இந்தியாவில் மாநிலங்களுக்குள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக ஒருவொருக்கு ஒருவர் பால் உற்பத்திப் பகுதியை மீறாமல் பால் கொள்முதலை அனுமதிப்பது வழக்கமாக இருந்து வரும் நிலையில், அமுல் நிறுவனம் மேற்கொள்ளும் நடவடிக்கை மரபு மீறிய செயல் என சுட்டிக்காட்டி மத்திய அரசிற்கு கடிதம் எழுதியுள்ளார்கள். பால் கொள்முதலுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள விலையை உயர்த்திட வேண்டும் என பால் உற்பத்தியாளர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள்.

இது தொடர்பாக, தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் த.மனோ தங்கராஜ் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த நிகழ்வுகளின் போது, ஆவின் நிர்வாக இயக்குநர் மரு.எஸ்.வினீத், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மா.சௌ.சங்கீதா, சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி (மதுரை வடக்கு), ஆ.வெங்கடேசன் (சோழவந்தான்), மு.பூமிநாதன் (மதுரை தெற்கு), மதுரை ஆவின் பொது மேலாளர் திருமதி.சாந்தி உட்பட அரசு அலுவலர்கள், பால் உற்பத்தியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மயிலாடுதுறை அருகே மது குடித்து இறந்த இருவரும் சயனைடு கலந்து கொலை!

ஆட்சியர் மகாபாரதி தகவல்!

மயிலாடுதுறை, ஜூன் 15-

மயிலாடுதுறை அருகே மது குடித்து இறந்த இருவரும் சயனைடு கலந்து கொலை செய்யப்பட்டுள்ளனர் என ஆட்சியர் மகாபாரதி தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் வட்டம், தத்தங்குடி கிராமம், திருவாரூர் மெயின் ரோடு என்ற முகவரியில் வசித்து வந்த பழனி குருநாதன் (வயது 55) த.பெ. வேலாயுதம் மற்றும் தத்தங்குடி கிராமஞ்சு நகர் பகுதியில் வசித்து வந்த பூராசாமி த.பெ. பாவாடை (வயது63) ஆகிய இருவரும் குத்தாலம் வட்டம், மங்கநல்லூர் கிராமம், திருவாரூர் மெயின் ரோட்டில் உள்ள பழனி குருநாதனுக்கு சொந்தமான கொல்லன் பட்டறையில் 12.06.2023 அன்று மாலை சுமார் 6.00 மணியளவில் இருவரும் மயங்கிய நிலையில் கிடந்ததை கண்டு அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் அவர்களை மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனையில் அனுமதித்து மருத்துவர்களின் பரிசோதனைக்கு பின்பு இருவரும் இறந்து விட்டதாக மருத்துவரால் அறிவிக்கப்பட்டது.

இருவரும் மயங்கி கிடந்த கொல்லன் பட்டறையில் இருவருக்கும் அருகில் மதுப்பாட்டில்கள் இரண்டு கிடந்தன.

மேற்படி கொல்லன் பட்டறை இறந்து போன பழனி குருநாதன் என்பவரால் நடத்தப்பட்டு வந்தது. அதில் இறந்த மற்றொரு நபரான பூராசாமி கடந்த மூன்று மாதங்களாக பழனி குருநாதன் என்பவருடன் வேலை செய்து வந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட பெரம்பூர் காவல் நிலையத்தில் குற்ற வழக்கு எண். 250/2023/US 174 CRPC நாள்12.06.2023-ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணையில் உள்ளது. இறந்த இரு நபர்களின் பிரேதங்களும் திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உடல் கூறு ஆய்வு (PM) செய்யப்பட்டது. மேலும் திருச்சி மண்டல தடயவியல் துறை, துணை இயக்குநர் அவர்களின் முதற்கட்ட பரிசோதனை அறிக்கையின் படி இறந்த இருவரது இரத்தம் மற்றும் உள்ளுறுப்புகளில் (VISCERAL) சயனைடு (CYANIDE) கலந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிகழ்விற்கு பின்னணியில் பழனி குருநாதனின் சகோதரரான வே.மனோகரன் மற்றும் வே.பாஸ்கரன் (இருவரும் முதல் தாரத்தின் மகன்கள்) சொத்துத்தகராறு காரணமாக மதுவில் சயனைடு (CYANIDE) கலந்து கொலை செய்ய முயற்சித்துள்ளது கண்டறியப்பட்டு இருவரும் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு மேல் விசாரணை நடைபெற்று வருகிறது. உடற்கூராய்வு அறிக்கையில் சயனைடு (CYANIDE) கலந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து காவல்துறையினரால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

நைஜீரியாவில் படகு கவிழ்ந்து 103 பேர் பலி!

அபுஜா, ஜூன் 15 -

நைஜீரியாவின் வடக்கே நைஜர் மாகாணத்தில் உள்ள எக்போடி கிராமத்தில் திருமண நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து பலர் இதில் பங்கேற்றனர். திருமணம் முடிந்து 300க்கும் மேற்பட்டோர் ஒரு படகில் திரும்பிக் கொண்டிருந்தனர். மேலும் பலர் படகில் தங்களது பைக்குகளை எடுத்து வந்திருந்தனர். அப்போது அதிக பளு காரணமாக படகு திடீரென ஆற்றில் கவிழ்ந்தது. இந்த விபத்தில் சிறுவர்கள் உள்பட 103 பேர் பரிதாபமாக பலியாகினர். அதிகாலை 3 மணியளவில் இந்த விபத்து நடந்தது. தகவலறிந்து வந்த மீட்புக் குழுவினர் 100க்கு மேற்பட்டோரை மீட்டுள்ளனர். மேலும், மாயமான பலரை தேடி வருகின்றனர். திருமணத்துக்குச் சென்று விட்டு ஊர் திரும்பிய மக்கள் படகு கவிழ்ந்த விபத்தில் பலியானது அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் மதுரை ஆவின் வளாகத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் ஆவின் மேலாண்மை இயக்குனர் மரு.எஸ்.வினீத், மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சௌ.சங்கீதா உட்பட பலர் உள்ளனர்.

மின் ஆளுமைக்கான மாநில பயிற்சி மையம் -

தமிழ்நாட்டின் 'நம்பிக்கை' இணையம் - கைபேசி செயலி!

தகவல் தொழில் நுட்பவியல் அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூன் 15-

தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாக ராஜன் நேற்று முன்தினம் (13.06.2023) "மின் ஆளுமைக்கான மாநில பயிற்சி மையம் மற்றும் தமிழ்நாட்டின் (Blockchain Backbone) நம்பிக்கை இணையம் (NI) "ePettagam Citizen Wallet " - கைபேசி செயலியினை தமிழ்நாடு மின் ஆளுமை முகமை அலுவலகத்தில் தொடங்கி வைத்தார்.

மின் ஆளுமைக்கான மாநில பயிற்சி மையம்

தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் உள் பயிற்சித் தேவைகள் மற்றும் பிற துறை சார்ந்த அலுவலர்களின் மின் ஆளுமை பயிற்சிக்காக, பி.டி.லீ செங்கல்வராயா கட்டிடத்தில் 7வது மாடியில் மின் ஆளுமைக்கான நவீன மாநிலப் பயிற்சி மையம் ஒன்று சுமார் 2750 சதுர அடியில் ரூ.1.93 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் ஆளுமை முகமையில் பணிபுரியும் அலுவலர்களுக்கும் (தலைமையகம் மற்றும் மாவட்டம்) மற்றும் பிற துறை அலுவலர்களுக்கும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை பயிற்சி அளிக்கும்.

பயிற்சித் தளங்கள்:

1. மின் அலுவலகப் பயிற்சி
2. G2C சேவைகள் பயிற்சி
3. மின் மாவட்ட மேலாளர்களுக்கான (EDMs) பயிற்சி
4. மென்பொருள் உருவகப்படுத்துதல் பயிற்சி
5. கைபேசி செயலி உருவகப்படுத்துதல் பயிற்சி
6. புவிசார் தகவல் அமைப்பு (GIS) பயிற்சி
7. மின் கொள்முதல் (eProcurement) பயிற்சி
8. திறன் மேம்பாட்டிற்கு தேவைப்படும் பிற பயிற்சி

இந்த பயிற்சியானது வழக்கமான பயிற்சிகளிலிருந்து மாறுபட்ட கணினி அடிப்படையிலான செய்முறை பயிற்சி ஆகும். செய்முறை பயிற்சி, கணினி அடிப்படையிலான பயிற்சி, பல்முறைப் பயிற்சி (விரிவுரை மற்றும் செயல்முறை) மாவட்டங்களில் முதன்மை பயிற்சியாளர்களுக்கு காணொளி முறையில் பயிற்சி, ஆகிய பயிற்சிகளை மின் ஆளுமைக்கான மாநிலப் பயிற்சி மையம் அளிக்கும்.

மின் ஆளுமைக்கான மாநிலப் பயிற்சி மையத்தின் சிறப்பு அம்சங்கள்:

இந்த மையம் இரண்டு வகுப்பறைகளைக் கொண்டுள்ளது, ஒவ்வொரு அறையும் 56 இருக்கைகள் கொண்டுள்ளது. மேலும் பின்வரும் முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளது.

A&B ஆகிய இரண்டு பயிற்சி அரங்குகளும் தனித் தனியான ஒலியமைப்புகளைக் (Audio System) கொண்டுள்ளன. மேலும் இவ்விரண்டு அரங்குகளையும் ஒன்றாக இணைக்க இயலும். ஒவ்வொரு அரங்கிலும் பங்கேற்பாளர்களுக்கு 98 இன்ச் அளவிலான LED திரை ஒன்றும் 55 இன்ச் அளவிலான 2 திரைகளும் உள்ளன.

ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் இலகுவான முறையில் பயிற்சியினை வழங்குவதற்கு 24இன்ச் தொடுதிரை மற்றும் உயர் நிலை CPUஉடன் கூடிய உயர்நிலை கணினி வழங்கப்பட்டுள்ளது.

பயிற்சியில் பங்கேற்கும் பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் பயிற்சிக்காக மடிக் கணினி வழங்கப்படும். எனவே, பயிற்சியாளர் முதன்மைத் திரையில் வழி நடத்தும் போதே, பங்கேற்பாளர்கள் தங்கள் மடிக்கணினிகளில் செய்முறை பயிற்சியை மேற்கொள்ளலாம்.

பயிற்சியாளர் மற்றும் பங்கேற்பாளர்கள் கலந்துரையாடவும் தங்களுக்கு எழும் சந்தேகங்களை பயிற்சியாளரிடம் கேட்டு தெளிவுபடுத்திக் கொள்ள பங்கேற்பாளர்களுக்கு மைக்ரோஃபோன் வழங்கப்பட்டுள்ளது.

அதிவேக அலைகற்றை, பயிற்சியின் போது பல பயனர்கள் இணைந்து பணியாற்ற வசதியளிக்கும்.

இந்த மையம், பயிற்சி மற்றும் திறன் வளர்ப்பு மூலம் மின் ஆளுமையில் ஒரு மாற்றத்தை உருவாக்கும்.

நம்பிக்கை இணையம் (NI) - Blockchain Backbone

நம்பிக்கை இணையம் (NI) என்பது தமிழ்நாடு மாநிலத்திற்காக கட்டப்பட்ட ஒரு நம்பிக்கை இணைய சேவை உள்கட்டமைப்பு ஆகும்.இசேவை சான்றிதழ்கள், கல்விச் சான்றிதழ்கள், மதிப்பெண் பட்டியல்கள், உரிமங்கள், நிலப் பரிவர்த்தனை ஆவணங்கள் மற்றும் தரவுகளைப் பாதுகாக்க இது அரசாங்கத்திற்கு வழிவகுக்கும், மேலும் அவற்றை சேதப்படுத்தாமல் பாதுகாக்கும். இபெட்டகம் கைபேசி செயலி மூலம், பொதுமக்கள் தங்கள் இசேவை சான்றிதழ்கள், கல்விச்சான்றிதழ்கள் மற்றும் மதிப்பெண் பட்டியல்களை பாதுகாப்பாகப் பகிரலாம்.

இதன் மூலம் தமிழ் நாட்டு மக்கள் மற்றும் வணிகர்கள் தங்கள் டிஜிட்டல் ஆவணங்களை வேலை வாய்ப்பு, உயர்கல்வி நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் பிற அலுவலர்கள் சரிபார்ப்பதற்காக பாதுகாப்பான மற்றும் காகிதமில்லாத முறையில் பகிர்ந்து கொள்ளமுடியும். வேலை வாய்ப்பு, கல்விசேர்க்கை, அரசு சேவைகளை அணுகுதல், வெளிநாடுகளுக்கு பயணம் செய்தல் அல்லது பணி புரிதல் போன்றவற்றிற்கான ஆவணங்களின் அசல் காகித நகல்களை நேரில் சென்று சமர்ப்பிப்பதற்கான தேவையை இது கணிசமாகக் குறைக்கும். அனைத்து சரிபார்ப்புகளும் NI Blockchain வாயிலாக நடைபெற்று, டிஜிட்டல் மயமாக்கப்பட்ட ஆவணங்கள் எந்த வகையிலும் சிதைக்கப்படவில்லை/ மாற்றப்படவில்லை என்பதை சான்றளிக்கும்.

NI Blockchain அரசுத்துறைகளுக்கிடையே தரவு மற்றும் டிஜிட்டல் ஆவணங்களை பாதுகாப்பாக பரிமாற்றம் செய்ய அனுமதிக்கும்.

இத்திட்டத்தின் முதற் கட்டமாக, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை

24 இசேவை சான்றிதழ் வகைகளை (சாதிச்சான்றிதழ், பிறப்பிடச் சான்றிதழ், வருமானச்சான்றிதழ், முதல் பட்டதாரிச் சான்றிதழ், முதலியன), கல்விச்சான்றிதழ்கள் மற்றும் மதிப்பெண் பட்டியல்களை இபெட்டகம் கைபேசி செயலி மூலம் பாதுகாக்கும். இச்செயலி மூலம் மின்னஞ்சல், குறுஞ்செய்தி அல்லது பிறவழிகளில் இந்த ஆவணங்களைப் பாதுகாப்பாகப் பகிர விருப்பமான வழியை குடிமக்கள் தேர்வு செய்யலாம். அதனுடன் தமிழ்நாடு அரசின் நிலப்பதிவுத் தரவையும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை பாதுகாக்கும்.

இந்நிகழ்ச்சியில், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை செயலாளர் ஜெ. குமரகுருபரன், மின் ஆளுமை இயக்குநர், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் முதன்மை செயல் அலுவலர் பிரவீன் பி.நாயர், இணை முதன்மை செயல் அலுவலர், திருமதி.பெ.ரமண சரஸ்வதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.